# இதயா மகளிர் கல்லூரி கும்பகோணம்

## தமிழ்த்துறை

| | | |
|---|---|---|
| பருவம் | : | 4 |
| அலகு | : | 5 (குற்றியலுகரப் புணரியல்) |
| பாடம் | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் |
| பாடக்குறியீடு | : | **16LCCLT8** |
| வகுப்பு | : | **II -**பி.லிட் |
| ஆசிரியர் பெயர் | : | செல்வி ஜெ.துர்கா,<br>உதவிப்பேராசிரியர்,<br>தமிழ்த்துறை,<br>இதயா மகளிர் கல்லூரி,<br>கும்பகோணம். |

# குற்றியலுகரப் புணரியல்

## பாட அறிமுகம்

- குற்றியலுகரத்தின் இயல்பு - குற்றியலிகரம் - குற்றுகரப் பொதுப் புணர்ச்சி – குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சி – குற்றுகர எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி – அதிகாரப் புறனடை போன்றவை அடங்கும்.
- அறுவகை குற்றியலுகரம், அவற்றின் ஒன்றுபட்ட, மாறுபட்ட புணர்ச்சி விதிகள்
- குற்றியலுகர நிலைமொழி சாரியை பெறுதல்
- உண்டு என்பது அடையும் மாற்றங்கள்
- குற்றியலுகர ஈற்றுத்திசைப் பெயர்களின் புணர்ச்சி
- பத்து என்னும் நிலைமொழியோடு ஒன்று முதல் எட்டு வருமொழியாக வந்து வந்து புணர்பவை
- பத்து என்பதோடு அளவு,நிறைப் பெயர்களின் புணர்ச்சி
- ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களோடு பத்து வருமொழியாக வந்து புணர்தல்
- தொண்ணூறு, தொள்ளாயிரம் நூறாக உருவாகுதல்
- ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களோடு அளவு நிறைப் பெயர்கள்
- எண்ணுப்பெயரோடு நூறு, ஆயிரம் வருமொழியாக வந்து புணர்வது
- லகர,னகர ஈற்றுச்சொற்கள் அன்,கெழுவாக மாறதல்
- புணர்க்கப்படா மொழிகள், அதிகார புறனடை.

### குற்றியலுகரப் புணரியல்

குற்றியலுகர ஈறு வருமொழியோடு புணரும் இயல்பை உணர்த்துவது. குற்றியலுகரம், பொருட்பெயரோடும் எண்ணுப்பெயர் முதலியவற்றோடும் புணர்வதை இவ்வியலானது உணர்த்துவதால் இது குற்றிரயலுகரப் புணரியல் ஆயிற்று.

### குற்றியலுகரம்

குற்றியலுகரம் என்பது குறில் அல்லாத (அடு,கொடு) பிற சூழலில் (ஆறு,முரசு) உகரம் வல்லெழுத்தை ஊர்ந்து வருவதாகும். இது தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து, அரை மாத்திரையாக ஒலிக்கும்.

குற்றியலுகர வகைகள்

“ ஈரெத்தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்

ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்

ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன் ”

என்ற நூற்பாவின் வழி,

- நெடில் தொடர் குற்றியலுகரம் (ஈரெழுத்தொருமொழி) -நாகு
- உயிர்த்தொடர் குற்றியலுகரம் - வரகு
- இடைத்தொடர்க் குற்றியலுகரம் - தெள்கு
- ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் -எ∴கு
- வன்தொடர்க் குற்றியலுகரம் -கொக்கு
- மென்தொடர்க் குற்றியலுகரம் - குரங்கு

என குற்றியலுகர வகைகள் என்ன என்பதை இதன்வழி அறியலாம்.

## குற்றியலிகரம்

“ யகரம் வருவழி இகரம் குறுகும்

உகரக்கிளவி துவரத் தோன்றாது ”

என்ற நூற்பாவின் வழி யகர முதன் மொழி வருமொழியாய் வரும்பொழுது நிலைமொழி உகரம் முழுதும் தோன்றாது. வல்லெழுத்தை ஊர்ந்து வரும் குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரியும்.

சான்று : நாகு + யாது = நாகியாது

## குற்றுகரப் பொதுப் புணர்ச்சி

“ ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்

வேற்றுமையாயின் ஒற்றிடை இனமிகத்

தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி ”

என்ற நூற்பாவானது ஈரெழுத்தொருமொழிக் குற்றியலுகரமும், உயிர்த்தொடர் மொழிக் குற்றியலுகரமும் வேற்றுமைப்புணர்ச்சியில் தன் இன ஒற்றோடு வல்லெழுத்து மிகுந்து வரும்.

சான்றாக,

1. ஈரெழுத்து மொழி = யாட்டுக்கால், யாட்டுச் செவி, யாட்டுத் தலை, யாட்டுப் புறம்.
2. இயல்பு கணம் = முயிற்றுக் கால், முயிற்றுச் சினை,முயிற்றுத் தலை,முயிற்றுப் புறம்
3. மென் கணம் = முயிற்று ஞாற்சி, முயிற்று நீட்சி, முயிற்று மாட்சி, முயிற்று யாப்பு என வரும்.

## மரப்பெயர்

“ மரப்பெயர்க் கிளவிக்கு கம்மே சாரியை ”

என்ற நூற்பாவில் வன் தொடராகவோ, மென் தொடராகவோ வரும் மரப்பெயர்ச் சொல்லிற்கு அம்முச் சாரியை வரும்.

சான்று : தேக்கு + அம் + கோடு = தேக்கங்கோடு,செதிள்,தோல்,பூ : வேப்பங்கோடு, செதிள்,தோல்,பூ எனவும் வரும்.

## குற்றுகரப் சிறப்புப் புணர்ச்சி

“ வண்டும் பெண்டும் இன்னொடு சிவணம் ”

வண்டு என்னும் சொல்லும், பெண்டு என்னும் சொல்லும் இன் சாரியைப் பெற்று வரும் என்று இந்நூற்பா வலியுறுத்துகின்றது.

சான்று : வண்டின் கால், பெண்டின் கால் வன வரும்.

## உண்டு என்னும் சொல்

“ உண்டென் கிளவி உண்மை செப்பின்

முந்தை யிறுதி அமய்யொடுங் கெடுதலும்

மேனிலை யொற்றே ளகாரம் ஆதலும்

ஆமுறை யிரண்டும் உரிமையம் உடைத்தே

வல்லெழுத்து வரூஉங் காலை யான ”

என்ற நூற்பாவானது வலியுறுத்துவது என்னவென்றால் உண்டு என்னும் மென்தொடர்க் குற்றியலுகர ஈற்றுச்சொல் பண்புப்பொருளை உணர்த்தும்போது டு கெட்டு வருமொழியோடு புணரும். மெய் ளகரமாகும் இருவகைத் திரிபு ஏற்படும்.

சான்று

1. உண்டு + பொருள் = உண்டு பொருள், உள் பொருள் பகரமாகிய முதன்மொழி வந்ததால் முதலிறுதி (ட் + உ) கெடாதும்,கெட்டு ளகரமாகியம் வந்தது.
2. உண்டு + சாக்காடு = உண்டு சாக்காடு, உண்டு காணம்,உண்டு தாமரை,உண்டு ஞாண்,உண்டு நூல்,மணி,யாழ்,வட்டு, அடை….

திசைப்பெயர்

" இருதிசை புணரின் ஏயிடை வருமே "

இரண்டு குற்றிலுகர திசைப்பெயர்கள் நிலை மொழியாகவும், வருமொழியாகவும் புணரும் போது இடையில் ' ஏ ' என்னும் சாரியை வரும்.

சான்று : வடக்கு + தெற்கு

வடக்கு + ஏ + தெற்கு = வடக்கே தெற்கு

மேற்கு + ஏ + கிழக்கு = வடக்கே தெற்கு

என வரும்.

குற்றுகரப் எண்ணுப்புணர்ச்சி

1.பத்தொடு எண்ணுப்பெயர்

" ஒன்றுமுத லாக எட்ட னிதி

எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்

குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே

முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே "

இரண்டு தவிர்த்து, ஒன்று முதலாக எட்டு இறுதியாகவுள்ள எல்லா எண்ணுப்பெயரும், பத்து என்ற எண்ணுப்பெயரின் முன்வரின், பத்து என்பதன் குற்றியலுகரம் தான் ஏறிய மெய்யொடும் கெடும்.அங்கு இன் சாரியை வந்து புணரும்.

சான்று

பதினொன்று, பதின் மூன்று, பதினான்கு,பதினைந்து,பதினாறு,பதினேழு, பதினெட்டு, ( பத்து + இன் + ஒன்று = பதினொன்று என்றவாறு பிறவும் புணரும்)

## 1.எண்ணுப் பெயரோடு பத்து

“ ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர்

நின்ற பத்த னொற்றுக் கெட ஆய்தம்

வந்திடை நிலையும் இயற்கைத்தென்ப

கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்

ஆற னிறுதி அல்வழி யான ”

ஒன்று முதல் ஒன்பது இறுதியாக உள்ள எண்ணப்பெயர்களின் முன்னர் வந்த பத்து என்னும் சொல்லினது தகர வொற்றுக்கெட,அங்கே ஆய்தம் நிலைத்தல் இயல்பாகும். அவற்றுள் ஆறு என்பதன் ஈறு அல்லாதவிடத்துக் (நிலை மொழியில்) குற்றியலுகரம் மேற்கூறிய இயல்பாய் மெய்யொடும் கெட்டு முடியும்.

சான்று

ஒருப.்.து, இருப.்.து

பத்து என்பதன் தகரவொற்று ஆய்தமாகத் திரியாது கெட்டு, ஒருபது (ஒன்று >ஒரு+ பத்து) என்று நிற்றலும் உண்டு.

## ஒன்பது என்னும் சொல்

“ ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்

முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்

ப.்.தென் கிளவி யாய்தபக ரங்கெட

நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி

ஒற்றிய தகரம் றகாரம் ஆகும். ”

ஒன்ப.்.து என்னும் நிலைமொழியின் முன், ப.்.து என்பதனை வருமொழியாக்குங்கால், ஒன்ப.்.து என்ற எண்ணப்பெயரினது ஒகரத்திற்கு முன்னர் ஒரு தகரவொற்றுத் தோன்றும். நிலைமொழியிலுள்ள னகர ஒற்று ணகர ஒற்றாகி

இரட்டித்து நிற்கும். நிலைமொழியில் நின்ற ப..து என்னும் சொல்லும், வருமொழிக்கண் நின்ற பகரமும் ஆய்தமும் கெட, நிலைமொழியில் இரட்டித்து நின்ற ணகர ஒற்றின் பின்னர் ஊகாரம் வந்து தோன்றும். வருமொழியீற்றுக் குற்றியலுகரம் ஏறிய தகர ஒற்று றகர ஒற்றாய் திரிந்து முடியும்.

சான்று : ஒன்ப..து + ப..து = தொண்ணூறு.

2.தொள்ளாயிரம்

" ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய் கெட
ஊஆவாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்."

ஒன்பது என்னும் சொல்லில் முதலில் நின்ற ஒகரம் முன்னே பத்து என்பதோடு புணரும்வழிக் கூறியவாறு போல (நூ-445), ஒரு தகர ஒற்றாய் வர அதன்மேல் ஏறி முடியும்.அவ் ஒகரத்தின் முன்னின்ற னகர ஒற்று ளகர ஒற்றாய் இரட்டித்து நிற்கும்.வருமொழியாகிய நூறு என்னும் எண்ணுப்பெயர் நகர மெய் கெட,அதன் மேல் ஏறிய ஊகாரம் ஆகாரமாகும் இயல்புடையது என்பர்.அம்மொழியிடை ஓர் இகரமும் ரகாரமும் வரும். ஈறாகிய குற்றியலுகரத்தையும்,அது ஏறி நின்ற றகர ஒற்றினையும் கெடுத்து ஓர் மகரம் ஒற்றாய் வந்து முடியும்.(நிலைமொரிப் பகரம் கெடும்.)

சான்று : ஒன்பது + நூறு = தொள்ளயிரம்.

# தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

## (வினாநிரல் & விடைக்குறிப்பு)

## பாடத்திட்டம்

அலகு - **1** நூன் மரபு, மொழி மரபு

அலகு - **2** பிறப்பியல்,புணரியல்

அலகு - **3** தொகை மரபு , உருபியல்

அலகு - **4** உயிர் மயங்கியல் , புள்ளி மயங்கியல்

அலகு - **5** குற்றியலுகரப் புணரியல்

# அலகு - 1 ( நூன் மரபு, மொழி மரபு )

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

( விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)

1. முதல் எழுத்துக்கள் யாவை? (நூற் -1)
2. சார்பெழுத்துகள் யாவை? (நூற் -2)
3. குற்றுயிர் மாத்திரை யாது? (நூற் -3)
4. நெட்டுயிர் மாத்திரை யாது? (நூற் -4)
5. 'மூவள பிசைத்தல் ஒரெழுத்தின்றே விளக்குக'. (நூற் -5)
6. அளபெடை என்றால் என்ன? (நூற் -6)
7. மாத்திரை யாது? (நூற் -7)
8. பன்னீருயிர் யாது? (நூற் -8)
9. பதினென் மெய் யாது? (நூற் -9)
10. 'உட்பெறும் புள்ளி உருவாகும்மே' – விளக்குக. (நூற் -14)
11. மூவினம் (வல்லினம், மெல்லினம்,இடையினம்) பற்றி எழுதுக. (நூற் :19-21)
12. சுட்டெழுத்து யாது? (நூற் -31)
13. வினாவெழுத்து யாது? (நூற் -32)
14. ஓரெழுத்து ஒருமொழி யாது? (நூற் -43)
15. 'உச்சகாரம் இருமொழிக் குரித்தே' - விளக்குக.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1. மகரக்குறுக்கம் குறித்து எழுதுக. (நூற் -13)

2. உடனிலை மயக்கம் குறித்து எழுதுக. (நூற் -30)

3. இசையில் எழுத்தின் நீட்சி குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?(நூற் -33)

4.குற்றியலிகரம் என்றால் என்ன? சான்றுடன் கூறு.(நூற்- 34-35)

5.குற்றியலுகரத்தை விளக்குக. (நூற் : 36-37)

6.அளபெடைகள் குறித்து எழுது (நூற் :41-42)

7.மொழியின் பெயர்,முறை,தொகையை விரித்து எழுதுக. (நூற் -45)

8.போலி மாற்றத்தைத் தொகுத்துரைக்க. (நூற் :54-58)

### பத்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1. சார்பெழுத்துக்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக (நூற் -2)
2. மெய் மயக்கம் குறித்து ஆய்க. (நூற் -22-29)
3. மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் குறித்து விளக்குக. (நூற் :59-68)
4. மொழிக்கு இறுதியாகும் எழுத்துக்கள் குறித்து விளக்குக. (நூற் : 69-82)

## அலகு **- 2 (** பிறப்பியல்,புணரியல் )

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

( விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)

1. பன்னீருயிர் எவ்வாறு பிறக்கும் (நூற் -84)
2. அ,ஆ எவ்வாறு பிறக்கும் (நூற் -85)
3. இதழ்குவி உயிர்கள் யாவை? (நூற் -87)
4. முதல் நா அண்ணம் யாது? (நூற் -89)
5. இடை நா அண்ணம் யாது? (நூற் -90)
6. நுனி நா அண்ணம் யாது? (நூ -91)

7. நா நுனி பரந்து பிறக்கும் எழுத்து யாது? (நூற் -93)

8. அண்ணம் ஒற்ற பிறக்கும் எழுத்து யாது? (நூற் -94)

9. அண்ணம் வருட பிறக்கும் எழுத்து யாது? (நூற் -95)

10. ல, ளகாரம் எவ்வாறு பிறக்கும் (நூற் -96)

11. இதழியைந்து பிறப்பன யாவை? (நூற் -97)

12. அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை பிறப்பது யாது? (நூற் -99)

13.‘ மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல் விளக்கு’.( நூற் -105)

14. புணர்ச்சியின் மூவகைத்திரிபுகள் யாவை? (நூற் -110)

15. வேற்றுமை உருபுகள் யாவை? (நூற் - 114)

16. அத்தின் அகரம் அகர முனையில்லை’ - விளக்குக. (நூற் -126)

17. எழுத்துச்சாரியை யாது? (நூற் - 135)

18. உடன்படுமெய் என்றால் என்ன? (நூற் -141)

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1. பிறப்பின் பொது இலக்கணம் தந்து எழுதுக (நூற் -83)

2. சார்பெழுத்து பிறப்பினைக் கூறு. (நூற் -101)

3. ஆயீரியல புணர்நிலைச் சுட்டே’- விளக்குக. (நூற் -108)

4. ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே’ - விளக்குக. (நூற் -109)

5. உருபுப்புணர்ச்சி பெறும் மாற்றங்களை விளக்குக. (நூற் -114-116 )

6. சாரியையின் பொது இயல்பினை எழுதுக. (நூற் -133)

7. எழுத்துச்சாரியைகள் குறித்து விளக்குக. (நூற் - 135 -138)

8. ‘ புள்ளியீற்று முன் உயிர்தனித்தியலாது ’- விளக்குக (அ) உயிரெழுத்தின் புணர்ச்சி இயல்புகள் யாவை? (நூற் -139)

### பத்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1. பிறப்பியல் குறித்து தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்குக. (நூற் : 83-103)
2. மெய்யெழுத்து பிறப்பு குறித்து ஆய்க. (நூற் -89 -100)
3. சாரியைக் குறித்து விவரி (நூற் -119 -134 )

## அலகு -3 ( தொகை மரபு , உருபியல் )

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

( விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)

1. 'அஃறினை விரவுப்பெயர் இயல்புமாருளவே ' – விளக்குக (நூற் -156)
2. ' குற்றிய லுகரக்கு இன்னே சாரியை ' - விளக்குக (நூற் -168)
3. கலம் என்னும் நிலைமொழி பெறும் சாரியை யாது? (நூற்டு -169)
4. பனை, கா எச்சாரியைப் பெறும்? –(நூற் -170)
5. 'நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்'- விளக்குக (நூற் -180)
6. மரப்பெயர் கிளவி எச்சாரியைப் பெறும்? (நூற் - 182)
7. 'நும்மென் இறுதி இயற்கையாகும்' –விளக்குக. (நூற் -188)

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1.இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி திரிபுகளை எழுதுக. (நூற் -158)

2.குறில்முன் ஒற்று இரட்டாத இடங்கள் யாவை? (நூற் -162)

3.அளவு, நிறை, எண்ணுப்பெயர்கள் குறித்து விளக்குக. (நூற் -165)

4.அளவு நிறைப் பெயர்களின் மொழி முதல் எழுத்துக்கள் யாவை? (நூற் - 171)

5.எல்லாம், எல்லாரும், எல்லீரும், குறித்து எழுதுக. (நூற் : 190- 192)

6.'மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே' –விளக்குக (நூற் - 193)

7.'ஒத்ததென்ப உணருமோரே' – விளக்குக. (நூற் - 194)

8.'முன்னர்த்தோன்றும் இயற்கைத் தென்ப '–விளக்குக (நூற் -195)

9. தாம்,நாம்,யாம் என்னும் மகர இறுதி எவ்வாறு புணரும்? (நூற்-189)

## பத்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1. உயிரீறு, மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சி குறித்து கட்டுரைக்க. (நூற் :144 -151)
2. உயிரீறு குறித்து ஆய்க (நூற் : 174 -182)
3. மெய்யீறுகள் குறித்து விவரி (நூற் : 183 -194)
4. உருபியல் சுட்டும் எண்ணுப்பெயரை விளக்குக. (நூற் : 199-200)

# அலகு -4 ( உயிர் மயங்கியல் , புள்ளி மயங்கியல் )

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

( விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)

1. 'யவமுன் வரினே வகரம் ஒற்றும்' – விளக்குக (நூற் -201)
2. 'இறுதி வகரம் கெடுதலும் உரித்தே' –எழுதுக. (நூற் -212)
3. 'மரப்பெயர்க் கிளவி எவ்வெழுத்து பெற்று வரும்? (நூற் -218)
4. 'மகப்பெயர்க் கிளவி எச்சாரியைப் பெறும்? (நூற் -219)
5. 'இராவென் கிளவிக் ககர மில்லை' - விளக்குக (நூற் -228)

6. ‘நிலா என்னும் சொல் எச்சாரியைப் பெறும்? (நூற் - 229)

7. யா,பிடா,தளா என்னும் மரப்பெயரை எழுதுக. (நூற் -230)

8.‘தூணி முன் பதக்கு’ எவ்வாறு வரும்? (நூற் -240)

9.பனி, வளி என்னும் சொல் எச்சாரியைப் பெற்று வரும்? (நூற் -242-243)

10.உதி, புளி என்னும் மரப்பெயரை எழுதுக. (நூற் -244-245)

11.நாள், திங்கள் எச்சாரியைப் பெறும்? (நூற் - 248- 249)

12. ‘ ஒடுமரக் கிளவி யுதிமர இயற்றே ’ –விளக்குக. (நூற் -263)

13. ‘பூ என்னும் பெயர்’ - விளக்குக. (நூற் - 269)

14. சே என்னும் மரப்பெயர் மற்றும் விலங்கு பெயர் பெறும் சாரியை யாது? (நூற் -279-280)

15. பனை முன் கொடி –விளக்குக. (நூற் -286)

16. ‘மழையென் கிளவி வளியியல் நிலையும்’ –விளக்குக. (நூற் -288)

17. ‘இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்’ - விளக்குக. (நூற் - 294)

18.தொழிற்பெய ரெல்லாந் தொழிற் பெயரியல - விளக்கு (நூற் -307)

19. ‘ இல்ல மரப்பெயர் விசைமர யியற்றே’ - விளக்குக.(நூற் - 314)

20. ஈம், கம் எனும் சொல் பெறும் சாரியை யாது? (நூற் - 330)

21. ‘குயினென் கிளவி இயற்கையாகும்’ – விளக்குக. (நூற் -336)

22. ‘ எகின் மரமாயின் ஆண்மர இயற்றே’ –விளக்கு (நூற் -337)

23. ‘இறால் தோற்றம் இயற்கை யாகும்’ -விளக்கம் தருக (நூற் - 344)

24. ‘சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்.’ – பொருள் தருக. (நூற் -365)

25. பீர் எனும் சொல் எச்சாரியைப் பெறும்? ( நூற் - 366)

26. வெயில் எச்சாரியைப் பெறும்? (நூற் - 378)

27.தமிழ் என்னும் சொல் எவ்வாறு புணரும்? (நூற் - 386)

28. இருளென் கிளவி வெயிலியல் நிலையும் -விளக்குக. (நூற் -403)

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1.அகர ஈறு புணருமாற்றை விளக்குக. (நூற் - 204)

2. 'நீட வருதல் செய்யுளுள் உரித்தே' – விளக்குக. (நூற் -209)

3.இயல்பாகும் அகர ஈற்றுச்சொற்களை விளக்கு. (நூற் -211)

4.பல, சில என்னும் சொல் புணருமாற்றை விவரி. (நூற் : 214 -216)

5.உகரம் பெறும் ஆகார ஈற்றுப்புணர்ச்சி குறித்து எழுதுக. (நூற் -235)

6.இன்றி என்னும் சொல் புணருமாற்றை விளக்குக. (நூற் -238)

7.சுட்டி னியற்கை முற்கிளந்தற்றே –விளக்குக (நூற் -239)

8. 'நாடுரி' - எவ்வாறு புணரும்? (நூற் - 241)

9. செய்யுளில் சுட்டுப்பெயராவது யாது? (நூற் - 259)

10. 'பனாட்டு' –எவ்வாறு புணரும்? (நூற் -285)

11. 'வேட்கை முன் அவா' – எவ்வாறு புணரும்? ( நூற் -289)

12. ' அகம் முன் கை' –எவ்வாறு புணரும்? (நூற் -316)

13. ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் புணருமாற்றை விளக்கு. (நூற் -318)

14. அல்வழியில் நும் என்னும் சொல் புணர்தலைக் கூறு. (நூற் -327)

15.னகர ஈறு குறித்து எழுதுக. (நூற் -333)

16.தேன் என்னும் சொல் எவ்வாறு புணரும்? (நூற் -341)

17.ஆந்தை , பூந்தை புணர்ச்சி விதி கூறு. (நூற் - 349)

18.யகர ஈற்றுப்புணர்ச்சி குறித்து எழுதுக. (நூற் - 358-362)

19.ரகர ஈற்றுப்புணர்ச்சி குறித்து எழுதுக. (நூற் - 363-366)

20.ழகர ஈற்றுப்புணர்ச்சி குறித்து எழுதுக. (நூற் - 384-395)

21.ளகர ஈற்றுப்புணர்ச்சி குறித்து எழுதுக. (நூற் - 397-405))

## பத்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1.ஈகார ஈறு குறித்து ஒரு கட்டுரை வரைக. (நூற் - 250-254)

2.மகர ஈறு குறித்து கட்டுரைக்க (நூற் -311-332)

3.புள்ளியீற்றுப் புணர்ச்சி குறித்து ஆய்க. (நூற் -321)

4. புள்ளி மயங்கியல் தரும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

# அலகு - 5 ( குற்றியலுகரப் புணரியல் )

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

( விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)

1.மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை –விளக்கு (நூற் -416)

2. ‘இருதிசைப் புணரின் ஏயிடை வருமே’ –விளக்கம் தருக. (நூற் - 432)

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1.குற்றியலுகரத்தின் இயல்புகள் யாவை? (நூற் -407- 410)

2.குற்றியலிகரம் என்றால் என்ன? சான்று தருக. (நூற் -411)

3.குற்றுகரப் பொதுப்புணர்ச்சியை விளக்குக. (நூற் -412-413)

4.வன்தொடர்.மென் தொடரை எழுதுக. (நூற் -415)

5.நெடில் தொடர், வன்தொடரை எழுதுக. (நூற் -418-419)

6.உண்டு என்னும் சொல் புணருமாற்றை விவரி. (நூற் -431)

7.திசைப்பெயர் முன் திசைப் பெயர் புணருவது எவ்வாறு? (நூற் -433)

8.பத்துடன் எண்ணுப்பெயர் புணர்தலைக் கூறு? (நூற் - 434)

9.எண்ணுப்பெயரோடு பத்து எவ்வாறு புணரும்? (நூற் -438 -439)

10.ஒன்பது என்னும் சொல் புணருமாற்றை விளக்குக. (நூற் -445)

11. ஒன்று முதல் ஒன்பதும்,பத்தும் புணருமாற்றை விளக்குக. (நூற்-438-446)

12.தொண்ணூறு, தொள்ளாயிரம் புணர்ச்சி விதியினைக் கூறுக. (நூற் -445,463)

## பத்து மதிப்பெண் வினாக்கள்

(விடைக்கான நூற்பா எண் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது )

1.குற்றுகரப் பொதுப் புணர்ச்சியை விவரி (நூற் -412-420)

2.குற்றுகரப் சிறப்புப் புணர்ச்சியை விளக்கு (நூற் -421-433)

3.குற்றுகரப் எண்ணுப் புணர்ச்சியை ஆய்க.

4. புணரியல் நிலையிடைஉணரத்தோன்றா' –விளக்கு (நூற் -482)

5. குற்றியலுகரப் புணரியலைத் தொகுத்துரைக்க.

# நன்றி